உ

கணபதி துணை.

செங்கல்பட்டுஜில்லா திருக்கழுக்குன்றத்தைச்சார்ந்த

நாவலூரில் திருக்கோயில் கொண்டுள்ள.

# ஆபத்காத்தவம்மையார் பதிகமும்

# பஞ்சரத்தினமும்.

இவை

இந்திரபீடம் கரபாத்திர சுவாமிகளாதீனம்

ஸ்ரீமான்-ஈசூர்-சச்சிதாநந்தசுவாமிகள் மாணாக்கர்

வித்வான் சே. சேணியப்பநாயகரவர்களாலும்

ஷை யாதீன மாணவருளொருவராகிய

திருக்கழுக்குன்றம்-வே. நடேச நாயகராலும்,

இயற்றப்பட்டு,

சென்னை இராயபுரம் " ஆக்நேய தருமதீர்த்த "

காரியதரிசி,

ம-ா-ா-ஸ்ரீ மு. கன்னியப்ப நாயகரால்

ஷை அம்மையாருக்கு ஆலயம்புதிதாய்

அமைத்துப் பிலவங்க௵ தை௴த்தில் நடத்தும்

கும்பாபிஷேக காலத்தில்

விநியோகிப்பதற்காக

ஷையார் மருகர்

நாவலூர்-கா. ஆறுமுக நாயகரது முயற்சியால்

சென்னை இராயபுரம்,

சைதன்யா அச்சுக்கூடத்தில்,

பதிப்பிக்கப்பட்டது.

1907.

கணபதி துணை.

இந்திரபீடம் கரபாத்திரசுவாமிகளாதீனம்

ஸ்ரீமத் ஈசூர்-சச்சிதானந்த சுவாமிகள் மாணாக்கர்

வித்துவான்-சே-சேணியப்ப நாயகரவர்களாலியற்றிய

# நாவலூர்-ஆபத்காத்தவம்மையார் பதிகம்.

---

## காப்பு.

நல்லகர்தா நண்ணு நாவலூர்க் கண்ணுறைவாள்
அல்லமொழி யாபத்காத் தாள்பதிகம்—சொல்லவே
ஐம்முகத்தோற் கார்ந்த வார்வமுளான் வாரணத்தின்
கைம்முகத்தோன் ஸ்ரீட்கமலங் காப்பு.

---

## பதினான்கு சீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

பூமலர்த் தும்பையும் பொன்னிறக் கொன்றையும்
புனையளிக் கூந்த லழகும்
பொலிதிலத மதிவதனப் புருவநீள் சிலைகணைப்
பொங்கருட் கண்ணி னழகுங்
காமரெட் பூநாசி கத்தரிகை யொத்தசெவிக்
கதிர்விடும் பரிதி கோடி
காணுறுங் குழையழகுங் கமழ்குமுதந் தொண்டையங்
கனியிற்செவ் வாயி னழகும்
வாமவளைக் கண்டமணி தாலியழ கொடுமார்பின்
வனைதரளத் தாம வழகும்
மழகொடியி டைக்கனக வாடைவட பத்திரப்
பந்தனங் கைச்சூலமும்
ஆமனகத் தாட்சிலம் பலங்கச்சிம் மாசன
மமர்ந்திருந் தருள் புரிகுவாய்
அன்னவயல் சூழ்நாவ லூர்காத்த வேர்பூத்த
வாபத்தைக் காத்த வுமையே. (1)

உம்பர்பா லொண்குடுமிக் கிரணம் பரந்துமே
லோங்கிய கழுக்குன் றின்மேற்
குள்ளதிசை யொருநாழி தூரத்தி லியோசிய
ரோதுங்குறு மலைச் சாரலின்
கொம்பனைய மாதங்கி நின்கோயிற் குற்றேவல்
குறையிலா தன்பர் செய்யக்
கொற்றசன் மினிமாதர் கோடிமேற் சூழவுங்
கொலுவீற் றிருந்து வந்தோ
ரிம்பரோ டியாவரு மெழின்மலர்த் தாளிணை
யிறைஞ்சிதுதி செய்து நிற்ப
வெல்லையொன் றில்லாத வரமெலா மென்மேலு
மீந்தருளி யாளு மெம்மோ
யம்பிகையெம் பவமதை யகற்றவரி தாகுமோ
வாழநீர்ப் பண்ணை யோடி
யணிவாளை பாய்நாவ லூர்காத்த வேர்பூத்த
வாபத்தைக் காத்த வுமையே, (2

நீண்டகோ டுடைமலை நிமிர்ந்துள குறிஞ்சியு
நீருலா மருத வைப்பு
நெருங்கிட மயங்குதிணை நீங்கரு மாலய
நேயமாக் கொண்டு சரிகள்
பூண்டொலிசெய் யாயிர மென்றளிர்க் கரந்தொறும்
பொற்சிலை வாளி முள்வாள்
பொறிநேமி தோமரம் பூமுனைக் கப்பணம்
போர்மழுத் திரி சூலமும்
வேண்டுகூர்ம் படையும்வெண் பல்லிளிப்புறுமண்டை
வீரமோ டேந்த நாகம்
வீசுகதிர் மாமணி விளக்கமெங் கும்ஒளிர
விப்பிரர்கள் வேத மோத

வாண்டபூ மன்னரொடு மளவிலா வன்பரு
மடிமலர்த் தலை வணங்கி
யருள்வரம் பெறநாவ லூர்காத்தவேர்பூத்த
வாபத்தைக் காத்த வுமையே. (3)

வைவமேன் மண்ணெலாம் வாணுதற் கணிகாப்பு
வான்கதிர் சிலம்பி னொளியாம்
வாயுசிறு நிசுவாசம் வாள்வெளி யுகிர்ச்சந்து
மகரவா ரிதிக ளேழுந்
தொய்யின்வார் முலையமுது சூழ்ந்த காரமே
சுரிமுகிற் குழலி னிறமாஞ்
சொல்லூழி கண்ணிமைக் காலம்பல் லண்டங்கள்
தோலாக் கழற்சி யாகு
முய்யுமா மூர்த்திகண் மூவர்செய்முத்தொழிலு
முவந்ததிரு விளை யாடலா
மோதரிய நாராய ணன்றங்கை யெனவந்த
வொண்டொடி வடிவ மதனை
யையமில் லாதறைய வடியனேன் வல்லனோ
வாசினிக் கனிகள் சிதரி
யண்ணிவய லடைநாவ லூர்காத்த வேர்பூத்த
வாபத்தைக் காத்த வுமையே. (4)

சாம்பவி சடாதரி சங்கரி பராசத்தி
சர்வபூ ரணி யாரணி
தாருகவி மோசனி சகலாத்ம காரணி
சத்தமா தாவி ராணி
வேம்பின்றண் டலைவாணி வெள்ளெலும் பணிபூணி
வேதா கமப் புராணி
விசையை நாராயணி விமலைகலை யானந்தி
விந்தைகொற் றவை புவானி

ஓம்பரா பரிகௌரி பைரவி சாமுண்டி
யுக்ரசண் டிகை மாலினி
யுமைசூலி யப்பிகை பார்வதி முக்கணி
யுரககங் கணி யோகினி
யாம்பலெண் டோளிசிவை யன்னையென் றேத்தினோர்க்
களவிலாத் திருவ ளிப்பா
யம்புயத் தடநாவ லூர்க்காத்த வேர்பூத்த
வாபத்தைக் காத்த வுமையே (5)

கல்வியொடு மெய்ஞ்ஞானம் வல்லபெரி யோர்க்கிறையுங்
கனவிலு முதவி செய்யார்
கரையிலா வாதாய வருவாயர் வாய்ச்செலின்
காசேனு மில்லை யென்பார்
செல்வமு மாயுளுந் தீர்வுறுங் காலத்திற்
றெய்வத்தை நொந் தேங்குவார்
தீயவினை யொருசிறி துஞ் செய்திலே மென்பர்தினஞ்
செற்றுவே றானை யுண்பா
ரில்வரூஉ நன்னடையி யங்கினே மென்பா
ரிரவலர்க் கினிய கூறு
ரிறுமாந்தி ருந்துலக வின்பநுகர் வோமென்
றிறந்துயிர யஞ் சேருவா
ரல்வினைக ளாற்றுதவர்க்கருளு மம்மணய்
அம்போரு கப்போ தின்மே
லாண்வரா லுகளுவ லூர்காத்த வேர்பூத்த
வாபத்தைக் காத்த வுமையே. (6)

என்றுமுள வறிவாவ தறியாமை யாய்மூலப்
பகுதியோ டாங்கா ரமும்
எணரிய வைம்பெரும் பூதமௌள திகமவையும்
எறிகடற் றிரை யென்னலாய்

நின் றுநா னீயவ னவரவை முதலனவு
    நீங்குமூன் றைம் பாலினு
நேயமா சாரிகை நிலையாத்து ரும்பென்ன
    நீடூழி தருவர் நிற்க
நன் றுதீ தென்னுது ஞாலமேற் கரியாகி
    நவில்சீவ முத்த ரென்ன
ஞானியாய்த் தன்னிலையை நாடினு ரென்றே
    நாளுஞ் சமாதி யாகி
யன்ருகு முளதிலையெ னற்குறிய பொருளா
    மவர்தொழ விருப்பை யேலம்
ஆலமுஞ் செறிநாவ லூர்காத்த வேர்பூத்த
    வாபத்தைக் காத்த வுமையே. (7)

மண்ணுடும் வானுடு மறைநான்கின் வழியேத்து
    மாதங்கி யுனை வணங்க
வறுமைநோ யில்லைநவை யில்லையச் சமுமில்லை
    மற்றலகை கோட்க ளில்லை
நண்ணுத பரமாதர் தங்கணே யமுமிலை
    நரகமே தேனு மில்லை
நல்லோர்கள் பகையிலை தீயோர்க ளுறவிலை
    ஞானகுரு னியமு மில்லை
யெண்ணுத வினையிலை யெள்குறுஞ் செயலிலை
    யீட்டுபா வங்க ளில்லை
யேழைலோ பங்களிலை யிழிவிலை யிறுதியிலை
    யினைவுறும் பிறவி யில்லை
யண்ணுக்கும் வாதமுத லைக்களி லேனுயில்லை
    யஞ்சாரல் வேத வெற்பின்
அயலாரப் பொழினுவ லூர்காத்த வேர்பூத்த
    வாபத்தைக் காத்த வுமையே. (8)

ஞானவிர்த் தியருறவை நாடுவே னடேனஞ்
ஞானவிர்த் திய ருறவையே
நால்வேத மாயாரை நம்புவே னம்பிடே
னல்வேத மாயா ரையே
தீனர்பா லுள்ளமதி ரங்கிடு மிரங்கிடா
தீனர்பா லெம் முள்ளமே
தேமறஞ் செய்வோரைத் தேற்றுந்தெற் றேமறந்
தேமறஞ் செய்வோ ரையே
தேனவாய் மொழிவரந் தெளிவென்றெ றியேனயிர்த்
தேனவாய் மொழியின் வரமே
சேவடித் துணைமனனஞ் செய்வென்செ யேனயற்
சேவடித் துணை மனனமே
ஆனபெரி யோர்களவை யஞ்சிடே னஞ்சும்வீ
ணானபெரி யோர்க ளவையே
அங்கமலி வாழ்நாவ லூர்காத்த வேர்பூத்த
வாபத்தைக் காத்த வுமையே. (9)

உலகெலாந் தப்பூதர மோம்புமொரு தாயாகி
யொளிமூல மாயை யாகி
யோதருமை நந்தசத் திகளாகிப் பரஞான
முதவுசிவ மூர்த்த மாகி
மலமிலா மூவராய் முத்தொழிலு மாகியே
மயங்குபசு பாச மாகி
மண்ணாகி வானாகி மதியாகி கதிராகி
வைகரு முடம்பு மாகிக்
கலகமார் பற்பலம தங்களாயப் பரமாகிக்
கலையாகி மறையு மாகிக்
கதியாகி யறமாகிப் பொருளாகி யின்பமாய்க்
கருதுபே ரறிவு மாகி

யலகிலறி வானந்த மாகியா ரியனாகி
    யாளுந்தெய் வமு மாயினை
யளிபொழில் சூழ்நாவ லூர்காத்த வேர்பூத்த
    வாபத்தைக் காத்த வுமையே. (10)

---

வாழ்த்து.

---

உலகம் யாவும்பல் லூழியும் வாழிய
இலகு முத்தொழி லேத்தும்பர் வாழிய
நலமுணூன்மறை வாழிய நாவலூ
ரலகிற் சோதியா பத்காத்தாள் வாழ்கவே.

---

164510
Q/25:417
N07

உ

கணபதி துணை.

இந்திரபீடம் கரபாத்திரசுவாமிகளாதீனம்

ஸ்ரீமான் - பவழை - தங்கவேலையர் மாணாக்கர்

திருக்கழுக்குன்றம் - வே. நடேச நாயகராலியற்றிய

# நாவலூர்-ஆபத்காத்தவம்மை பஞ்சரத்தினம்.

காப்பு

பூத்தாரும் பொய்கைப் புனனாவ லூர்ப்பதியைக்
காத்தா ளெனுமாபத் காத்தாளெம்—மாத்தாட்கு
பஞ்சரத்தி னம்பாடப் பாலிக்கும் வண்டுவளக்
குஞ்சரத்தி னெண்முகத்துக் குன்று.

பதினான்கு சீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

சீர்கொண்ட வருமறையின் முடிவினுறை யொருபொருளின்
சீர்த்திமிகு ஞான வடிவே
சிற்சத்தி யாமென்ன விச்சைஞா னங்கிரியை
செப்புமுச் சத்தி வடிவா
யேர்கொண்ட சாத்துவித மாதியா முக்குணத்
தேற்றமூ வினைக ளாற்ற
வீசரோர் மூவராய் ஜெகஜீவர் யாவுமா
யிவைக்கெலாஞ் சத்தி பலவாய்
நேர்கொண்ட வத்துவித நித்யபரி பூர்ணமெனு
நிமலமாம் பரப் பிரமமே
நின்சொருப மாமென்ன நேருமிவை தம்மொடும்
நின் றுவிளை யாடல் புரிவோ

யார்வுண்ட தவமுனிவ ரினமருவு தண்கழுக்
குன்றமணை நாவ லூரி
லருகாத நிதியோடு முயர்ஞான கதிநேர்வி
னருளாபத் காத்த வுமையே. (1)

மேகநிக ரளகமேன் மின்சுட்டி யழகொடும்
வேறுமுள பணியி னழகும்
மேலுலவு சந்த்ரவட் டத்தையொத் திட்டதோர்
விதுமுகப் பொட்டி னழகும்
யோகமுற யாவர்க்கு மேகமன தொடுநோக்கி
யுளகருணை விழியி னழகும்
உம்பர்கதிர் சோமனென வொளிருகா தணியழகு
மொத்தமூக் குத்தி யழகும்
மோகனு தியரான வஞ்சகரை வீழ்த்தியெறி
மூவிலைச் சூல வழகும்
முரண்கொடிய மகிடன்முது கிறவூன்று தாளழகு
மூடனேன் காண வருவாய்
ஆகமக வினைமுனிவ ரினமருவு தண்கழுக்
குன்றமணை நாவ லூரி
லருகாத நிதியோடு முயர்ஞான கதிநேர்வி
னருளாபத் காத்த வுமையே. (2)

கன்னலெனு மொழியினர் பின்னுசுருள் குழலினர்
கணையைநிக ரொண் விழியினர்
கனியொத்த விதழினர் பனியுற்ற நுதலினர்
காந்தணிக ரிரு கையினர்
மின்னொத்த விடையினர் மேலஞ்சு முலையினர்
விழைகாம் பெனுந் தோளினர்

விரிவுற்ற சிந்தையார் மேலுற்ற மையலாய்
விழியோட வவர்பி ஞேடித்
தன்னெஞத்த நின்னடிய ரினமருவித் தாழாது
தமியனே னுள்ளு டைந்தேன
தஞ்சமென மலர்கொண்டு தகவினர்ச் சனைசெய்து
தாரணியி லுய்ய வருளா
யன்னையென வருண்முனிவ ரினமருவு தண்கழுக்
குன்றமணை நாவ லூரி
லருகாத நிதியோடு முயர்ஞான கதிநேர்வி
னருளாபத் காத்த வுமையே. (3)

கொலைகளவு கட்காம மாதியாங் குணங்கள்பல
குடிகொண்ட வலிய நெஞ்சால்
கொண்டனிகர் குழன்மகளிர் கூட்டுறவி லென்னாளுங்
குலவிமகிழ் கொடிய பாவி
புலையுமன மொருவழித் தாகாத வற்பருற
வொருவா துவந்த தோஷி
யுலகின்மிசை யுயிர்கள்பசி யாரவவர் முகநோக்கி
யோரணு மிடாத லோபி
கலைகள்பல வாயாத கயவரின மிகமருவிக்
கண்டசுகம் விழை கண்மூடி
கருதரிய நினதுபய சரணவா ரிசமலர்கள்
கருத்திலு னாளு முளதோ
வலைவரிய மன[illegible]ரிவ ரினமருவு தண்கழுக்
குன்ற[illegible]ண நாவ லூரி
லருகா[illegible] நிதியோடு முயர்ஞான கதிநேர்வி
னருளாபத் காத்த வுமையே. (4)

பண்டைபகி ரண்டமொ டனைத்துநின துருவென்னும்
　　பணிதால மலை யிலக்கே
பழையடியர் மனவாக்குக் காயமா மிவைநாடிப்
　　பரகரொணுப் பரம வணுவே
மண்டிய வவித்தையான் மனமாதி யெனநின்ற
　　மாயையாங் கரிய விருளே
மன்னிய வவத்தையொரு மூன்றினொடு சங்கற்ப
　　மறவீசு துரிய வொளியே
கண்டபொறி புலனொடு கரணநா சத்திலொளிர்
　　ககனமாம் பெரிய வெளியே
கவலையற நின்சரணங் கண்டுநற் கதியடையக்
　　கடையனேற் கருள் புரிகுவா
யண்டர்குழு வொடுமுனிவ ரினமருவு தண்கழுக்
　　குன்றமணி நாவ லூரி
லருகாத நிதியோடு முயர்ஞான கதிநேர்வி
　　னருளாபத் காத்த வுமையே. (5)

---

வாழ்த்து.

வாழி வையகம் வாழி விண்ணுடவர்
வாழி நற்கழுக் குன்றின்வாய் நாவலூர்
வாழி யெவ்வங்கண் மாற்றுமா பத்காத்தாள்
வாழி யவ்வாய்சரண் வாழ்த்து மடியரே.

முற்றிற்று.

164510

Q 25 : 417
N07